**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 209/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.1 |
| Name : | திருமதி. கொளஞ்சியம்மாள் |
| Father's Name/Husband Name: | திரு. பழனிவேல் |
| Village : | பெண்ணகோணம் |
| Taluk : | குன்னம் |
| Age : | 53/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 27.11.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகள் செல்வராஜ் மற்றும் சுசிலாவை எனக்கு தெரியும். எனது பக்கத்து வீட்டுக்காரர்கள் தான். கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு சனிக்கிழமை அன்று காலையில் சுமார் 8 மணியளவில் என்னுடைய வயலுக்கு சென்றேன். அப்போது எனது வயலுக்கு அருகிலுள்ள எதிரிகளின் வயலில் எதிரிகள் மக்காளச் சோளம் தட்டை குவித்துக் கொண்டிருந்தார்கள். நான் எனது நிலத்தை பார்க்க போனேன். எதிரிகள் என்னிடம் இங்கே எதுக்குடி வந்த தேவிடியா, ஊராயி, தட்டுவாணி என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசி, பறையனோட போனவளே என்று சொல்லி திட்டினார்கள். 1ம் எதிரி செல்வராஜ் கையில் வைத்திருந்த கம்பியால் என் கழுத்தில் அடித்தார். 2ம் எதிரி சுசிலா கையில் வைத்திருந்த குச்சியால் எனது முழங்காலில் அடித்துவிட்டார். நான் மயக்கமடைந்து கீழே விழுந்தேன். எதிரிகள் பில்லு வெட்டும் கழக்கட்டை காட்டி துண்டு துண்டாக வெட்டி புதைத்து விடுவேன் என்று

எதிரி செல்வராஜ் என்னை மிரட்டினார். அவரின் மனைவி சுசிலா அவளை வெட்டு வெட்டு என்று கூச்சலிட்டார். பக்கத்து நிலக்காரர் கொளஞ்சிவேல் என்பவர் ஓடி வந்து ஆள் இல்லாத பெண்ணிடம் ஏன் கையை வைத்தாய் என்று தட்டிக் கேட்டார். உன் நொண்டி புருசன் என்னடி செய்வான் என்று கூறிக்கொண்டு எதிரிகள் என்னை விரட்டிக் கொண்டு வந்தனர். நான் அங்கிருந்து தப்பி ஓடிவந்தேன். நான் மயக்கநிலையில் இருந்ததால் ரோட்டில் சென்றவர்கள் என் மகனுக்கு போன் போட்டு வரவழைத்தனர். ஆட்டோ மூலமாக எனது மகன் என்னை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார். அங்கு 3 நாள் சிகிச்சையில் இருந்தேன். நான் சிகிச்சையில் இருக்கும்போது எதிரிகள் என் வீட்டிற்கு சென்று என் கணவரை தாக்கினார்கள். நான் சிகிச்சையில் சேர்ந்த அன்றே போலிசார் மருத்துவனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் படித்து காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். ஆனால் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1ம் எதிரியும் எனது கணவரும் உடன் பிறந்த சகோதரர்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள எங்களது இடத்தை GVK Companyக்கு விற்பனை செய்துவிட்டோம் என்றால் சரிதான். அந்த இடத்தின் அளவு ஒரு ஏக்கர் 10 சென்ட் இருக்கும். மொத்த இடத்தையும் GVK Companyக்கு விற்றுவிட்டோம். நாங்கள் விற்பனை செய்த இடத்தை தவிர மீதியிடம் ஏதும் அங்கு இல்லை என்றால் சரிதான். 1வது எதிரியின் இடத்தை விற்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனைக்கு செல்லும்போது எத்தனை மணியிருக்கும் என்றால் காலை 10 மணியிருக்கும். 14.05.2022 முதல் 16.05.2022 வரை நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக தான் இருந்தேன் வேறு எங்கும் செல்லவில்லை. எத்தனை நாள் கழித்து மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் ஆனேன் என்றால் 3 நாள் கழித்து டிஸ்ஜார்ஜ் ஆனேன். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் சம்பவத்தன்றே மருத்துவமனையில் மாலை சுமார் 6-7 மணியளவில் விசாரித்தார்கள். மருத்துவமனையில் சேர்ந்த பிறகு காலை 10 மணியிலிருந்து மாலை 6 மணி வரை போலிசாரை நான் சந்திக்கவில்லை என்றால் சரிதான். எனது சின்னம்மா மகன் காவல் துறையில் எஸ்பியாக இருக்கிறார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள்

குற்றச்சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. சம்பவயிடத்தில் எங்களுக்கு இடமே இல்லை என்று எதிரிகளின் மீது உள்ள கால்புணர்ச்சியின் காரணமாக எனது சின்னம்மா மகன் காவல் துறையில் எஸ்பியாக இருப்பதால் எதிரிகளுக்கெதிராக பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.